| | | | | |
|---|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.121/2022 | | வா. சா . 1 | தேதி.22.02.2023 | |
| பெயர் | திரு. வெள்ளிங்கிரி | | வயது | 50 |
| த/பெ. | திரு. சின்னமாரன் | | முகவரி | 14 ஈ, ஸ்ரீ ரங்கராயன் ஓடை, வெள்ளிப்பாளையம் ரோடு |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

13. 1ம் வாதி ருக்குமணி என் உடன்பிறந்த சகோதரி. ருக்குமணிக்கும் எனக்கும் 15 வயது வித்தியாசம். வழக்கு சொத்துக்கள் அய்யாக்குட்டியின் மகன் ராமனுக்கும், அவரது வாரிசுகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20 பட்டாவில் சுப்பன் என குறிப்பிடப்பட்டுள்ளது என் சித்தப்பா. மற்ற மூவரும் ராமனின் வாரிசுகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.25 பத்திரத்திலேயே வா.சா.ஆ.20 பட்டா சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பனுக்குரிய பாகத்தைவிட்டுவிட்டு ராமனுக்குரிய பாகத்தைதான் அவரது வாரிசுகள் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணங்கள் சரியாக இருந்ததால்தான் 6,7 பிரதிவாதிகள் சுவாதீனத்தை பார்த்து உரிய மறுபயன் கொடுத்து சொத்தை வாங்கினார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லாத காரணத்தால் தான் ஒரு போலியான உயில் ஆவணத்தை ஏற்படுத்தி ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேள் என்றும், அதே பொய்யான உயில் ஆவணத்தை கொண்டு பெற்றுள்ள தீர்ப்புகள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**ஒப்பம்/-பெ.க.சிவக்குமார்**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.